மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதிக்கு ஒரு அரசு கல்லூரி என்ற திட்டம் அரசிடத்திலே இல்லை. வாய்ப்பு கிடைக்கும்போது இதைப் பற்றிப் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

94—

பூம்புகார் தொகுதியில் தொழிற்பயிற்சிப் பள்ளி துவங்குதல்

**47382—திரு. எம். பூராசாமி:*

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் ஒரு தொழில் பயிற்சிப் பள்ளி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழ இடமில்லை.

திரு. எம். பூராசாமி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி மிகவும் ஏழை எளிய மக்களைக் கொண்டுள்ள தொகுதி. அங்கே மாணவ மாணவியர் தொழிற் பயிற்சிப் பள்ளி ஆரம்பித்தால் அவர்கள் வாழ்க்கைத் தரம் உயரும். ஆகவே, எதையும் செய்யும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு இந்த ஆண்டில் அந்தத் தொழிற் பயிற்சிப் பள்ளியை ஆரம்பிப்பார்களா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் அமைந்துள்ளது. நாகப்பட்டினத்தில் ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. தமிழகத்தின்

ஒப்பற்ற தலைவி இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நீடாமங்கலத்தில் ஒரு அரசு தொழிற் பயிற்சி நிலையம் இந்த ஆண்டு துவங்க அனுமதித்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 100 இருக்கைகள் கொண்ட ஒரு அரசு தொழிற் பயிற்சி நிலையம் துவங்க தொடர் இனச் செலவு சுமார் 5 இலட்சம், தொடரா இனச் செலவு சுமார் 60 இலட்சம் ஆக மொத்தம் ரூ.65 இலட்சம் செலவாகும். தற்போதைய அரசின் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு பூம்புகார் தொகுதியில் புதிதாக ஒரு அரசு தொழிற் பயிற்சி நிலையம் துவங்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். பூராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பணத்தைப் பற்றிக் கவலைப்படாமல் மக்கள் நலனைப் பற்றிக் கவலைப்படும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசில் இந்தத் தொழிற் பயிற்சிக்குத் தேவையான இடங்களைப் பூம்புகார் தொகுதியில் உள்ள மக்கள் இனாமாகத் தருவதற்கு முன்வருவார்கள். ஆகவே, நாகப்பட்டினம் 70 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அதே போல் நீடாமங்கலம் 100 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதால் அங்கே சென்று ஏழை எளிய மக்கள் படிப்பதற்கு முடியவில்லை. ஆகவே, மக்கள் நலன் கருதி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதைச் செய்ய முற்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய அரசின் நிதிநிலை காரணமாகப் புதிய அரசினர் தொழில் பயிற்சி நிலையம் துவக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 95, திரு. து. மூர்த்தி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

95—

பெருந்தோட்டத்தில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுதல்

*11025—**திரு. து. மூர்த்தி:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, பெருந்தோட்டத்தில் துணை ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதி திருவெண்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை சார்ந்த பெருந்தோட்டத்தில் பெருந்தோட்டம் கிழக்கு, பெருந்தோட்டம் மேற்கு என இரு துணை சுகாதார மையங்கள் செயல்பட்டு வருகின்றன. பெருந்தோட்டத்தில் புதிதாக துணை ஆரம்ப சுகாதார நிலையம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

திரு. து. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழித் தொகுதியில் அடங்கியுள்ள பெருந்தோட்டம் ஊராட்சி பெருந்தோட்டத்தில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகையும், அதனைச் சுற்றியுள்ள பகுதியில் மீனவ மக்களும், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களும் சுமார் 10 ஆயிரத்திற்கும் மேல் வாழ்ந்து வருகிறார்கள். தற்சமயம் அங்குள்ள பொதுமக்களுக்கு உடல் நிலை சரியில்லாமல் அவசரமாக எடுத்துச் செல்கிறபோது. அருகில் சுமார் 10 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள திருவெண்காடு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் அல்லது 20 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள சீர்காழி அரசு பொது மருத்துவமனைக்கும் எடுத்துச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. காரணம் தற்சமயம் பெருந்தோட்டத்தில் துணை ஆரம்பச் சுகாதார நிலையம் இல்லாததால் பொது மக்களும் அவதிப்படுகிறார்கள். அதேபோல் மருத்துவ அதிகாரிகளும் மிகுந்த அவதிப்படுகிறார்கள். எனவே, இந்த நிலையைப் போக்குகிற வகையில் எங்களுடைய இதயதெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசில் பெருந்தோட்டத்தில் துணை ஆரம்பச் சுகாதார நிலையம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி திருவெண்காடு அரசு ஆரம்பச் சுகாதார நிலையத்தைச் சார்ந்த பெருந்தோட்டத்தில் பெருந்தோட்டம் கிழக்கு, பெருந்தோட்டம் மேற்கு என இரு துணைச் சுகாதார மையங்கள் செயல்பட்டு வருகின்றன. பெருந்தோட்டம் கிழக்கு துணைச் சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பகுதியில் சுமார் 3482 மக்கள் வசிக்கிறார்கள். அதேபோல் பெருந்தோட்டம் மேற்கு துணைச் சுகாதார நிலையத்தைப் பொறுத்தவரையில் சுமார் 3611